மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண்.147/2020

2025ம் ஆண்டு அக்டோபர் 23ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கராஜ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

23.10.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் தாவா பூமியை ஜோதிமணி என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான். ஜோதிமணி கிரையம் பெற்றது 4 ஏக்கர் 40 சென்ட் என்றால் அது எனக்கு தெரியாது. ஜோதிமணி எனக்கு எவ்வளவு நிலத்தை கிரயம் கொடுத்தார் என்றால் 2 ஏக்கர் 20 சென்ட் நிலமும் தடபாத்தியமும் கிரயம் கொடுத்தார். ஜோதிமணி கிரயம் பெற்றபோது கிரைய பூமி தரிசாக இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. ஜோதிமணி பெயரிலான கிரைய ஆவணத்தை பார்த்து தான் நான் கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான்.

2. ஜோதிமணி பெயரிலான கிரைய ஆவணத்தில் கிணறு எதுவும் கிடையாது என்றால் சரிதான். கிணறு இல்லாததால் ஜோதிமணி கிரயம் பெற்றபோது அந்த கிரைய சொத்து தரிசாக இருந்தது என்றால் அவர்கள் போர் போட்டு கூட ஓட்டி இருக்கலாம். போர்வெல்

இருந்திருந்தால் அதை பத்திரத்தில் கண்டிப்பாக குறிப்பிட்டு இருப்பார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. தாவா பூமிக்கு மேல்புறம் தென்வடல் ரோடு உள்ளது என்றால் ஆமாம்.

3. ஜோதிமணி பூமியின் மேல்புறத்து அத்தில் தரிசு நிலம் போக தென்வடல் கிழமேல் பிஏபி கிளை வாய்க்கால் உள்ளது என்றால் வாய்க்கால் உள்ளது. அதில் எனக்கும் பங்கு உள்ளது. அந்த வாய்க்கால் தேசிய நெடுஞ்சாலை தாண்டி சுமார் இரண்டு மூன்று கிலோமீட்டர் தெற்கே செல்கிறது என்றால் தெற்கே செல்கிறது இரண்டு மூன்று கிலோமீட்டர் தூரம் செல்கிறதா என்பது எனக்கு தெரியாது. அந்த வாய்க்கால் 5 அடி அகலம் இருக்குமா என்றால் இல்லை ஒரு அடி அகலம் தான் இருக்கும்.

4. அந்த வாய்க்கால் மூலமாக சுமார் 300 ஏக்கர் நிலம் பாசனம் செய்யப்படுகிறது என்றால் இல்லை. அந்த வாய்க்கால் பிஏபி கிளை வாய்க்கால் என்றால் அது சின்ன வாய்க்கால். அந்த வாய்க்கால் மெயின் வாய்க்காலில் இருந்து தான் பிரிந்து வருகிறது என்றால் ஆமாம். எனது பூமிக்கு வடபுறம் மண் ரோடு உள்ளது என்றால் இல்லை வாய்க்கால் கரை தான் உள்ளது. நான் சொல்லும் வாய்க்கால் கரை என்பது பிஏபி மெயின் வாய்க்கால் என்றால் சரிதான். அந்த மெயின் வாய்க்கால் வெள்ளகோவில் தாண்டி முடிகிறது என்றால் அது எனக்கு தெரியாது.

5. ஒவ்வொரு மெயின் வாய்க்காலுக்கும் பக்கவாட்டில் ஒரு ஜீப் ரோடு இருக்கும் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த ஜீப் ரோட்டில் பொதுவாகவே அனைவரும் சென்று வாகனங்கள் சென்று வந்து கொண்டிருக்கும் என்றால் அது எனக்கு தெரியாது. எனது பூமியின் வடபுறத்தில் வாய்க்கால் கரை உள்ளதாக தான் எனது வழக்குரையில்

நான் சொல்லி உள்ளேனா என்றால் ஆமாம். எனது கிரைய பத்திரத்தில் கண்டுள்ள வாசகங்கள் அனைத்தும் சரியாக உள்ளதா என்றால் சரிதான். சில வாசகங்கள் சரியாக எழுதவில்லை.

6. எனது கிரைய ஆவணத்தில் சில வாசகங்கள் சரியாக எழுதப்படவில்லை என எனது வழக்குரையில் நான் சொல்லி உள்ளேனா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. நான் காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் ஜோதிமணி பூமியின் வடபுற அத்தில் இருந்து மேற்கிலிருந்து கிழக்கு வரை பாதை கேட்டு இந்த வழக்கை போட்டு உள்ளேன். எனது கிரைய ஆவணத்தின் அடிப்படையில் நான் கேட்டுள்ள பாதையில் எனக்கு உரிமை உள்ளதா என்றால் உள்ளது.

7. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆன கிரைய ஆவணத்தில் தென்வடல் 25 லிங்ஸ் பாதை என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதை வடபுற வேலியிலிருந்து தெற்கே கிணறு வரை வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். அந்தப் பாதை வழியாக கிணற்றை ஒட்டி கிழபுறமுள்ள கிணறு பொது இடத்திற்கு சென்று வந்து கொள்ள வேண்டியது என எனது கிரைய ஆவணத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். எனது கிரைய ஆவணத்தில் கிழமேல் பொது தடம் என குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. ஆனால் மற்றும் மேற்படி பூமிகளுக்கு பாத்தியப்பட்ட மாமூல் பொதுத்தடத்தின் வழியாக என தாவா தடத்தையும் கண்டு சொல்லப்பட்டுள்ளது.

8. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் எந்த இடத்திலாவது கிழமேல் தடமானது மாமூல் தடம் என கண்டுள்ளது என்று குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் வழக்குரையில் 13 வது பத்தியில் அதைப் பற்றி நான் சொல்லி உள்ளேன். நான் சொல்வது நான் வழக்குரையில் கேட்டுள்ள பரிகாரம் என்றும் நான் கிழமேல் தடம் மாமூல் தடம் என வழக்குரையில் எந்த இடத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா பாதையின் வடக்கு ஓரத்தில் ஜோதிமணி கேட் அமைத்துள்ளார் என்றால் கேட் எதுவும் இல்லை.

9. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதைப் பொறுத்து எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்தில் வடக்கோட்டில் பிஏபி வாய்க்கால் உள்ளதாக சொல்லி உள்ளார் என்றால் அதை கரை என்று தான் நாங்கள் சொல்லுவோம். ஆணையர் தனது வரைபடத்தில் பிஏபி வாய்க்காலை ஒட்டி தென்புறத்தில் வாய்க்கால் தடம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அவர் அவ்வாறு தான் சொல்லி உள்ளார் ஆனால் நாங்கள் கரை என்று சொல்லுவோம்.

10. ஆணையர் வரைபடத்தில் ஜி1 ஜி2 ஜி3 என்று மூன்று கேட் உள்ளதாக காட்டியுள்ளார் என்றால் சரிதான். ஜி1 ஜி3 ஆகிய கேட்டுகள் வடபுறத்து வேலியில் அமைக்கப்பட்டுள்ளது என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜி3 என்ற கேட் எனது பாகத்தில் உள்ளது என்றால் சரிதான். அது 2 அடி அகலம் தான் இருக்கும். எனது கிழபுறத்து பங்கில் தென்னை மரங்கள் வைக்கப்பட்டு அது காய்ப்பிற்கு வந்துவிட்டது

என்றால் இன்னும் காய்ப்பிற்கு வரவில்லை வரும் நிலையில் உள்ளது. எனது பூமியின் தெற்கோடாக நான் ஆழ்துளை கிணறு அமைத்துள்ளேன் என்றால் சரிதான். அதில் ஆயில் என்ஜின் வைத்து நான் நீர் பாசனம் செய்து வருகிறேன் என்றால் சரிதான்.

11. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் எந்த இடத்திலாவது தடம் உள்ளதாக அவர் காட்டி உள்ளாரா என்றால் பிவிசி பைப் 3 க்கும் ஜோதிமணி அத்திற்கு இடையே 14 அடி அகலத்தில் தடம் உள்ளதாக காட்டியுள்ளார். அதில் தான் நான் சென்று வந்து கொண்டு இருக்கிறேன். பிவிசி பைப் 4 ஜோதிமணி அத்திற்கு 13 அடி அகலத்தில் தடம் உள்ளதாக நீதிமன்ற ஆணையர் காட்டியுள்ளார் பிவிசி பைப் 4 க்கும் ஜோதிமணி 15 அடி அகலத்தில் தடம் உள்ளதாக நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. நான் சொல்வது அத்தனையும் தவறு என்றும். பிவிசி பைப்பிற்கும் ஜோதிமணி அத்திற்க்கும் இடையே காலியிடம் உள்ளதாக தான் நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் காட்டியுள்ளார் என்றும் அதில் தடம் உள்ளதாக அதில் குறிப்பிட்ட எதுவும் சொல்லப்படவில்லை என்றும் அது தரிசு நிலமாக தான் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

12. ஜி2 கேட் குறித்து நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் புதிதாக மூங்கில் தட்டி அமைக்கப்பட்டுள்ளதாக சொல்லி உள்ளார் என்றால் பச்ச மூங்கில் புதிதாகத்தான் இருக்கும். நீதிமன்ற ஆணையரை அழைத்துச் செல்வதற்கு முந்தைய தினம் இரவில் பொது வேலியை வெட்டி புதிதாக நான் மூங்கில் தட்டியை அமைத்து உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள

பரிகாரத்திற்கு நான் எந்த ஆவண சாட்சியத்தையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் தடத்தை நான் அனுபவம் செய்து வரவில்லை என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

13. நான் பொது கிணற்றையும் அனுபவிப்பது இல்லை என்றும் நான் எனது பூமியில் தனியாக ஆழ்துளை கிணறு அமைத்து அதன் மூலம் தான் நான் நீர் பாசனம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கற்பனையாக சொல்லும் கிழமேல் தடத்தின் ஆரம்பத்திலேயே ஓலைச்சாலை உள்ளது என்றால் இல்லை அதில் பந்தல் தான் உள்ளது. அந்த ஓலைச்சாலைக்கும் ஜோதிமணி அத்திற்கும் இடையே 7 அடி வித்தியாசம் உள்ளது. அதில் தான் நான் போய் வந்து கொண்டிருக்கிறேன். நான் சொல்வது போல் தாவா கிழமேல் தடமானது எப்போதும் நிலையில் இருந்தது இல்லை என்றும் அந்த தடத்தை நான் எந்த காலத்திலும் அனுபவம் செய்து வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கும் ஜோதிமணிக்கும் எங்கள் நிலங்களுக்கு வடபுறத்தில் உள்ள ஜீப் ரோடு தான் பாதை என்று சொன்னால் சரியல்ல. எனது பூமியின் வடபுறம் உள்ள பாதை சுமார் 30 அடி அகலம் உள்ள மண்பாதை என்றும் அது சுமார் 7 கிலோமீட்டர் வரை கிழக்கே செல்கிறது என்றும் அதில் லாரி வகையறாக்கள் வண்டி வகையறாக்கள் சென்று வருகிறது என்றும் அதைத்தான் நான் எனது சொத்திற்கு பாதையாக அனுபவம் செய்து வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

14. நான் வழக்குரையில் கேட்டுள்ள மூன்றாவது பரிகாரம் என்றால் ஜோதிமணி இடத்தில் பொது பாதைக்கு கிழபுறம் மேற்கு பகுதியில்

உள்ள முள்வேலியை அகற்றி கொடுக்கும்படி பரிகாரம் கேட்டுள்ளேன். நான் கற்பனையாக சொல்லி உள்ள தாவா கிழமேல் தடத்தின் கிழக்கோட்டில் பொதுவேலியில் தடம் எடுத்துக் கொடுக்க சொல்லி நான் இந்த வழக்கில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி உள்ளேன் என்றால் சரியல்ல. மேற்கு பகுதியில் தான் கம்பி வேலியை எடுக்க சொல்லி நான் பரிகாரம் கேட்டுள்ளேன்.

15. நான் கிரையம் பெற்றதற்கு பின்பு எனது பூமிக்கும் ஜோதிமணி பூமிக்கும் நடுவே கம்பி வேலி போட்டுக் கொண்டோம் என்றால் சரிதான் தடம் விட்டு தான் கம்பி வேலி போட்டோம். தாவா 3 வது பரிகாரத்தில் நாங்கள் பொதுவில் அமைத்துக் கொண்ட கம்பிவேலியில் கிழக்கோட்டு பகுதியில் உள்ள கம்பிவேலி அகற்றி கொடுக்கும்படிதான் நான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் இல்லை. ஆவணப்படியும் ஆணையர் அறிக்கை படியும் தாவா தடம் எதுவும் நிலையில் இல்லை என்றும் நான் அனுபவம் செய்து வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

16. நான் பிரதிவாதி மீதும் அவரது கணவர் மீதும் சுமார் 10 முறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேனா என்றால் ஆமாம். ஜோதிமணி மகன் மின்சார வாரியத்தில் வேலை செய்கிறார் என்றும் அவர் மீதும் நான் பலமுறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் அவரும் அவரது தகப்பனாரும் சரவணன் என்பவரும் பிவிசி பைப்பை தோண்டி எல் பெண்ட் போட்டார்கள் அதனால் புகார் கொடுத்தேன். அவர்கள் பூமியில் தான் அந்த பிவிசி பைப்பை தோண்டி வேலை பார்த்தார்கள் என்றால் ஆமாம். ஆனால் எனது தடத்தில் வேலை பார்த்தார்கள் அதனால் புகார் கொடுத்தேன்.

17. நான் காவல் துறையில் பணிபுரிந்ததால் எனது செல்வாக்கை பயன்படுத்தி நான் பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தார் மீது பொய் புகார் கொடுத்து அலைக்கழித்து அவர்களுக்கு மிகுந்த கஷ்டங்களை ஏற்படுத்தி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதியை மிரட்டி அவரிடம் இருந்து பலாத்காரமாக தாவா தடத்தை வாங்க முயற்சி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி அவரது நிலத்தில் போர்வெல் அமைத்து மின் இணைப்பு பெற முயற்சி செய்தபோது நான் அதற்கு ஆட்சேபனை தெரிவித்து விசாரணை செய்தார்கள் என்று சொன்னால் கிணற்றிற்கு வந்தபோதுதான் நான் ஆட்சேபனை செய்தேன் மற்றது எனக்கு தெரியாது.

18. நான் கிரயம் பெற்ற தேதியில் இருந்து பொதுக்கிணற்றில் எந்த அனுபவமும் நான் செய்து வரவில்லை என்றும் ஆயில் எஞ்சின் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றும் அவர்தான் அதை அனுபவம் செய்து வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல. கடந்த முறை பிஏபி வாய்க்காலில் தண்ணீர் வந்தபோது நான் ஆட்சேபனை தெரிவித்து பிஏபி வாய்க்கால் நிர்வாகத்தினர் தண்ணீர் எடுக்க விடாமல் ஷட்டர் போட்டுவிட்டு சென்று விட்டார்கள் என்றால் சரியல்ல. நான் இந்த தாவாவில் கேட்டுள்ள 1வது மற்றும் 2வது பரிகாரங்கள் கற்பனையானது என்றும் அது போல் தடம் எதுவும் நிலையில் இல்லை என்றும் நான் அதை அனுபவம் செய்து வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

19. நான் வழக்குறையில் கேட்டுள்ள 3வது பரிகாரமானது நான் இல்லாத தடத்தில் நானே தட்டி அமைத்துக் கொண்டு அதை பொறுத்து

பரிகாரம் கேட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் வருவதற்கு முந்தைய நாள் முதல் நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் ஜி2 என காட்டப்பட்டுள்ள பகுதியில் எந்த தட்டியும் நிலையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல 4 மாதத்திற்கு முன்புதான் அந்த தட்டியை நான் போட்டேன். நான் சொல்வது போல் தாவா தடம் நிலையில் இல்லாத காரணத்தினால் தான் நான் இந்த வழக்கில் செயலுறுத்து கட்டளை பரிகாரம் கேட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

20. நான் எவ்வாறேனும் பிரதிவாதிகளை மிரட்டி அவர்களிடமிருந்து எனக்கு உரிமை இல்லாத இல்லாத தடத்தை பலாத்காரமாக அவர்களிடம் இருந்து பெற்று விட வேண்டி தான் நான் பொய்யான சங்கதிகள் சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு தற்போது எனது சொத்து அருகில் 2 ஏக்கர் நிலம் தான் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. நான் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 2 ஏக்கர் நிலத்திலும் தடம் கேட்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

21. எனது நடவடிக்கையால் பிரதிவாதிகள் அவர்களது பூமியில் எவ்வித விவசாய பணியும் செய்ய முடியாமல் கஷ்ட நிலையில் உள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரங்கள் குறித்து நான் எந்த விதமான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும் இந்த வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.10.23 19:22:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்